# காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் எத்தனை பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை?

## ராகுலுக்கு அமித் ஷா கேள்வி



ஹரியாணாவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

**ரிவாரி, செப். 27:** காங்கிரஸ் ஆட்சியில் உள்ள தெலங்கானா, கர்நாடகத்தில் எத்தனை பயிர்களை குறைந்தபட்ச ஆதரவு விலையின் கீழ் கொண்டு வந்துள்ளனர் என்று ராகுல் காந்திக்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஹரியாணாவில் வெள்ளிக்கிழமை தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட அமித் ஷா ரிவாரி பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியதாவது:

குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்து பேசினால் வாக்குகளைப் பெறுவிடலாம் என்று ராகுல் காந்திக்கு சிலர் ஆலோசனை வழங்கியுள்ளனர். எனவேதான், விவசாயிகள் நலனில் அக்கறை இருப்பதுபோல அவர் பேசி வருகிறார். எம்எஸ்பி (குறைந்த பட்ச ஆதரவு விலை) என்பதற்கு விரிவாக்கம் என்ன என்பது ராகுலுக்குத் தெரியுமா? எது காரீப் பயிர், எது பருவகாலப் பயிர் என்ற வேறுபாடு அவருக்குத் தெரியுமா?

ஹரியாணாவில் விவசாயிகள் விளைவிக்கும் 24 பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை பாஜக அரசு அளித்து வருகிறது. காங்கிரஸ் ஆளும் தெலங்கானா, கர்நாடகத்தில் எத்தனை பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கொடுக்கப்படுகிறது?

ஹரியாணாவில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.1,300 ஆக இருந்தது. பாஜக ஆட்சி அமைந்த பிறகு இது ரூ.2,300 ஆக உயர்த்தப்பட்டது. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இதனை ரூ.3,100 ஆக உயர்த்துவோம்.

ராணுவத்தினரின் நீண்டகால கோரிக்கையான ஒரே பதவிக்கு ஒரே ஓய்வூதியம் என்ற கோரிக்கையை பிரதமர் மோடி தலைமையிலான அரசுதான் நிறைவேற்றியது. ஹரியாணாவில் கடந்த 10 ஆண்டுகளில் சமச்சீரான வளர்ச்சியை பாஜக கொண்டு வந்துள்ளது.

அதேநேரத்தில் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் ஆட்சியாளர்களுக்கு கமிஷன், அதிகாரிகளுக்கு லஞ்சம், பொதுப் பணத்தில் ஊழல், அரசு நிர்வாகத்தில் இடைத்தரகர்கள் என்ற நிலைதான் உள்ளது என்றார்.

ஹரியாணாவில் அக்டோபர் 5-ஆம் தேதி சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அக்டோபர் 8-இல் வாக்குகள் எண்ணப்படுகின்றன. இங்கு ஆளும் பாஜக-காங்கிரஸ் இடையே நேரடிப் போட்டி உள்ளது.

# ஜிஎஸ்டி எளிமையாக்கம் அவசியம்

## ராகுல் காந்தி வலியுறுத்தல்



**புது தில்லி, செப். 27:** 'பிரதமர் மோடியின் ஏகபோக கொள்கையால் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சீரழிக்கப்பட்டுள்ளன; எனவே, சிறு தொழில்களுக்கு வங்கிச் சேவைகளை விரிவுபடுத்துவதோடு, சரக்கு-சேவை வரியை (ஜிஎஸ்டி) எளிமையாக்குவது அவசியம்' என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

ஜம்மு-காஷ்மீர் பேரவைத் தேர்தலையொட்டி, காங்கிரஸின் தொழில்முறை பணியாளர்கள் பிரிவு சார்பில் ஜம்முவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்த யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த தொழில்துறையினர், தொழில்முறை பணியாளர்கள் என 300-க்கும் மேற்பட்டோருடன் ராகுல் காந்தி கலந்துரையாடினார்.

இந்நிகழ்வின் விடியோவை எக்ஸ் வலைதளத்தில் வெள்ளிக்கிழமை பகிர்ந்த அவர் வெளியிட்ட பதிவில் கூறியதாவது:

ஜம்மு-காஷ்மீரின் இளம் தொழில்முனைவோரின் கண்ணில் தெரியும் விரக்தி, நாடு முழுவதும் பெரும்பாலான தொழில்முனைவோர் மற்றும் சிறு தொழிலதிபர்களின் போராட்டத்தை பிரதிபலிக்கிறது.

பிரதமர் மோடியின் ஏகபோக கொள்கையால் வேலைவாய்ப்புகள் பறிபோயுள்ளன; குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சீரழிக்கப்பட்டு, மக்களின் வாய்ப்புகள் பறிக்கப்பட்டுள்ளன.

மோசமான முறையில் அமல்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பு போன்ற மோடி அரசின் திறனற்ற கொள்கைகள் மூலம் சிறு-நடுத்தர தொழில்கள் மீது திட்டமிட்ட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தி பொருளாதாரத்தில் இருந்து நுகர்வு பொருளாதாரமாக இந்தியா மாறிவிட்டது. இதுபோன்ற சூழலில், சீனாவுடன் நாம் போட்டியிடவோ அல்லது அனைத்து இந்தியர்களுக்கும் வளத்தை உறுதி செய்யவோ முடியாது.

இந்தியாவுக்கு சிறப்பான நிலை தேவை. எனவே, ஜிஎஸ்டி வரி விதிப்பை எளிமைப்படுத்துவதோடு, சிறு தொழில்களுக்கு வங்கிச் சேவைகளை விரிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் புதிய வாய்ப்புகள் மற்றும் வேலைகள் உருவாக்கம் உத்வேகம் பெறும் என்று ராகுல் கூறியுள்ளார்.

விடியோவில் ராகுல் பேசுகையில், 'நாட்டில் 5 முதல் 10 வரையிலான பெரும் 'ஏகபோக' சக்திகளால் சிறு-நடுத்தர தொழில்கள் கடும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

இதுவே, வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு முக்கிய காரணம். இந்த 'ஏகபோக' சக்திகள், அரசியல் அமைப்புமுறையையும் கட்டுப்படுத்துகின்றன' என்றார்.

# பிகாரில் ரயில் மீது கல்வீச்சு தாக்குதல்: ஜன்னல் கண்ணாடிகள் உடைப்பு

**சமஸ்திபூர், செப். 27:** பிகார் மாநிலத்தில் ஜெய்நகர்- புது தில்லி இடையிலான சுதந்திர சேனானி அதிவிரைவு ரயில் மீது சமூகவிரோதிகள் சிலர் கற்களை வீசி தாக்கினர்.

இது தொடர்பாக கிழக்கு மத்திய ரயில்வே காவல்துறை அதிகாரிகள் கூறியதாவது:

பிகாரின் ஜெய்நகரில் இருந்து புது தில்லி செல்லும் சுதந்திர சேனானி விரைவு ரயில் சமஸ்திபூர் ரயில் நிலையம் அருகே வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் வந்து கொண்டிருந்தபோது சமூக விரோதிகள் சிலர் ரயிலை நோக்கி சரமாரியாக கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் ரயிலின் இரு ஏசி வகுப்பு பெட்டிகள் மற்றும் சமையல் கூடம் அமைந்துள்ள பெட்டிகளின் ஜன்னல்கள் உடைந்து சிதறின. அதிருஷ்டவசமாக இதில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்தசம்பவத்தை அடுத்துஓட்டுநர் ரயிலை உடனடியாக நிறுத்திவிட்டு, ரயில்வே காவல் துறைக்கு தகவல் தெரிவித்தார். விசாரணைக்கு பிறகு ரயில் மீண்டும் புறப்பட்டுச் சென்றது. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

# பண்டிகை காலத்தை முன்னிட்டு 6,000 சிறப்பு ரயில்கள்

## மத்திய அமைச்சர் தகவல்

**புது தில்லி, செப். 27:** நிகழாண்டு வரவிருக்கும் துர்கா பூஜை, சத் பூஜை மற்றும் தீபாவளி பண்டிகை ஆகியவற்றை முன்னிட்டு நாடு முழுவதும் சுமார் 6,000 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன என்று மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

மேற்கு வங்கம், பிகார் மற்றும் உத்தர பிரதேசத்தில் விமர்சையாக கொண்டாடப்படும் துர்கா பூஜை, சத் பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஏராளமானோர் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். எனவே, அவர்களின் வசதிக்காகவும், ரயிலில் கூட்ட நெரிசலைக் குறைப்பதற்காகவும் சிறப்பு ரயில் வழித்தடங்கள் அம்மாநிலங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் 5,975 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. இது கடந்த ஆண்டை காட்டிலும் சுமார் 1,500 சிறப்பு ரயில்கள் அதிகம். ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்ப இது உதவியாக இருக்கும்.

இது தவிர, 108 ரயில்களில் கூடுதல் பொது பிரிவு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. பண்டிகையின் போது ஏற்படும் கூட்ட நெரிசலை சமாளிக்க 12,500 கூடுதல் பெட்டிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை அடுத்த ஓரிரு ஆண்டுகளில் பல்வேறு ரயில்களில் இணைக்கப்படும் என்றார்.

நிகழாண்டு துர்கா பூஜை அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்க உள்ளது. தீபாவளி பண்டிகை அக்டோபர் 31-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

# திருப்பதி லட்டுகளில் கலப்படம்: 9 பேர் சிறப்பு விசாரணைக் குழு

## ஆந்திர அரசு நடவடிக்கை

**அமராவதி, செப். 27:** திருப்பதி லட்டுகளில் விலங்கு கொழுப்பு கலப்படம் குறித்து முழுமையாக விசாரிக்க 9 பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழுவை (எஸ்ஐடி) ஆந்திர அரசு அமைத்துள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் லட்டு பிரசாதம் உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான முந்தைய ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் திருப்பதி லட்டு தயாரிக்க நெய்க்கு பதிலாக விலங்கு கொழுப்பு போன்ற தரமற்ற பொருள்கள் பயன்படுத்தப்பட்டதாக முதல்வரும் தெலுங்கு தேசம் தலைவருமான சந்திரபாபு நாயுடு அண்மையில் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

லட்டு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள்களில் மாட்டுக் கொழுப்பு, பன்றி கொழுப்பு, மீன் எண்ணெய் போன்ற கலப்படங்கள் இருந்ததாக கூறும் ஆய்வறிக்கையை ஆளும் தெலுங்கு தேசம் கட்சி வெளியிட்டது.

அதேநேரம், முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் குற்றச்சாட்டை மறுத்த ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி, தனது அரசியல் ஆதாயத்துக்காக கோடிக்கணக்கான ஹிந்துக்களின் உணர்வை அவர் புண்படுத்திவிட்டதாக விமர்சித்தது.

பக்தர்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த விவகாரம், நாடு முழுவதும் பேசுபொருளாக மாறியுள்ளது.

இதனிடையே, லட்டு கலப்படம் குறித்து சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் சந்திரபாபு நாயுடு உறுதியளித்திருந்தார். அதன்படி, 9 பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்து, மாநில அரசின் தலைமைச் செயலர் நீரவ் குமார் பிரசாத் அரசாணை பிறப்பித்துள்ளார்.

ஏழுமலையான் கோயிலை நிர்வகிக்கும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் (டிடிடி) புனிதத்தன்மையை பாதுகாக்கும் உறுதிப்பாட்டின்கீழ், தற்போதைய ஒட்டுமொத்த விவகாரமும் முழுமையாக மற்றும் விரிவாக விசாரிக்கப்பட வேண்டுமென மாநில அரசு கருதுகிறது; அந்த அடிப்படையில், 9 பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று மேற்கண்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டூர் சரக காவல்துறை ஐ.ஜி. சர்வசிரேஷ்ட திரிபாதி தலைமையிலான இக்குழுவில் விசாகப்பட்டினம் சரக டிஐஜி கோபிநாத், ஒய்எஸ்ஆர் மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ்வர்தன் ராஜு, திருப்பதி காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் வெங்கட ராவ், துணை கண்காணிப்பாளர்கள் சீதா ராம ராவ், சிவநாராயண சுவாமி உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

அதேநேரம், 'லட்டு கலப்பட குற்றச்சாட்டுகள் குறித்து முதல்வரின் மேற்பார்வையில் உள்ள காவல் துறை விசாரிப்பது போதுமானதல்ல; உச்சநீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்' என்று ஒஎஸ்ஆர் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

# ஜெகன் மோகனின் திருப்பதி பயணம் திடீர் ரத்து

**அமராவதி, செப். 27:** லட்டு விவகாரத்தையொட்டி ஆந்திர முன்னாள் முதல்வரும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் தலைவருமான ஜெகன் மோகன் ரெட்டி திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சனிக்கிழமை (செப். 28) தரிசனம் செய்ய மேற்கொள்ள இருந்த பயணம் திடீரென ரத்து செய்யப்பட்டது.

கோயிலுக்குள் நுழைவதற்கு முன் தனது இறை நம்பிக்கை குறித்து தேவஸ்தானத்திடம் ஜெகன் உறுதியளிக்க வேண்டும் என்று ஆளும் கூட்டணியினர் வலியுறுத்தி வந்த நிலையில், திருப்பதி பயணத்தை ஜெகன் ரத்து செய்துள்ளார்.

திருப்பதி லட்டுகளின் புனிதத்தன்மை மீட்க திருமலை திருப்பதி தேவஸ்தானம் கோயில் வளாகத்தில் பரிகார பூஜைகளை நடத்தியது.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு திருப்பதியின் புனிதத்தை கெடுத்தற்காக வீடுகளில் பரிகார பூஜைகளை சனிக்கிழமை செய்யுமாறு ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் தொண்டர்களை ஜெகன் அறிவுறுத்தினார்.

அன்றைய தினம் திருப்பதி கோயிலுக்கு ஜெகன் நேரடியாக வந்து தரிசனம் செய்யப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜெகன் வெள்ளிக்கிழமை கூறுகையில், 'திருப்பதிக்கு வரக்கூடாது என்று ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு காவல் துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. மறுபுறம், திருப்பதியில் அண்டை மாநில பாஜக தொண்டர்களைக் குவித்து சட்டம் ஒழுங்கு பிரச்னையை உருவாக்க முயற்சிக்கின்றனர். இது தவறான செயல்.

ஏழுமலையானை மதிக்கும் மற்றும் நேசிக்கும் நபராக, திருப்பதிக்குச் சென்று விவகாரத்தைத் திசைதிருப்ப விரும்பவில்லை. அதனால் எனது பயணத்தை ஒத்திவைக்கிறேன்' என்றார்.



# தெலங்கானா அமைச்சருக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை சோதனை

**ஹைதராபாத், செப். 27:** பணமோசடி வழக்கில் தெலங்கானா வருவாய்த் துறை அமைச்சர் பி.ஸ்ரீநிவாசா ரெட்டி மற்றும் அவர் தொடர்புடைய சிலருக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை வெள்ளிக்கிழமை சோதனை நடத்தியது.

தலைநகர் ஹைதராபாத் உள்பட மாநிலத்தில் 5 பல்வேறு இடங்களில் சோதனை நடத்தப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கிரஸில் மூத்த தலைவரான பி.ஸ்ரீநிவாசா ரெட்டி, தெலங்கானா அமைச்சரவையில் வருவாய், வீட்டுவசதி, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு ஆகிய துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கிறார்.

இந்நிலையில், அமைச்சரின் மகன் ஹர்ஷா ரெட்டி ரூ.7 கோடி மதிப்பில் விலை உயர்ந்த 7 கைகடிகாரங்களை வாங்கியிருப்பதாக வருவாய் புலனாய்வு இயக்குநரகம் புகார் அளித்தது.


**யூனியன் பேங்க் ஆப் இந்தியா** Union Bank of India

A Government of India Undertaking

**Asset Recovery Branch : தபால் பெட்டி எண்.8, எண்.235, 1வது தளம், ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் – 641 001. மொபைல் : 8369578740**

**கேட்பு அறிவிப்பு**

**2002 சர்பாசி சட்டம் பிரிவு 13(2)ன் கீழ்**

பெறுநர் : கடன்தாரர் : திரு.G.முருகன், த/பெ.திரு.கோவிந்தன், கதவு எண்.219, பூம்பட்டி, மாரமங்கலம், ஓமலூர் தாலூகா, சேலம் – 636 503, உத்தரவாதமளித்தவர் : திரு.K.பெருமாள், த/பெ.திரு.கந்தசாமி, வாலாடசாமிபட்டி, காட்டுவளவு, ஓலைப்பட்டி கிராமம், மேட்டூர் தாலூகா, சேலம் – 636 001.

**பொருள் : 2002ம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகள் சீரமைப்பு மற்றும் பிணையநலன் அமலாக்கச் சட்டப் பிரிவு 13(2) உடன் பிரிவு 13(3)ன் படியான அறிவிப்பு**

கடன்தாரர்(கள்) **திரு.G.முருகன்** தாங்கள் கீழ்குறிப்பிட்ட கடன்வசதியை எமது **சரவணம்பட்டி கிளையிலிருந்து** பெற்று அந்த கணக்கின் நிலுவைகள்/தவணைகள்/வட்டி/இயக்குதலை நிறைவளிக்கும் வகையில் செயல்படுத்தாத காரணத்தால் இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு, அதாவது வருமான அங்கீகாரம் மற்றும் விவேகமான கணக்கீட்டு விதிகளுக்கிணங்க இல்லாததால் அது **25.09.2017 அன்று** இயங்காச் சொத்து என வகைப்படுத்தப்பட்டது. **30.06.2024 அன்று** தங்கள் கணக்கிலுள்ள நிலுவைத் தொகை **ரூ.46,76,907.28 (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு மற்றும் பைசா இருபத்து எட்டு மட்டும்)** ஆகும்.

மேற்குறிப்பிட்ட கணக்கில் கடன்தாரர்(கள்)டமிருந்து வங்கிக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை விபரங்கள் கீழ்வருமாறு :

**1) கணக்கு எண். 565141000002735 – கடன் தொகை : ரூ.14,00,000/–, நிலுவைத் தொகை : ரூ.26,80,529.24; 2) கணக்கு எண். 565141000002654 – கடன் தொகை : ரூ.10,90,000/–, நிலுவைத் தொகை : ரூ.19,96,378.04; மொத்த நிலுவை 30.06.2024 தேதி அன்று : ரூ.46,76,907.28.**

நாங்கள் பலமுறை நினைவுறுத்தியும் தாங்கள் மேற்படி கடன் கணக்கிற்கான நிலுவைத் தொகைக்கு, தொகை எதுவும் செலுத்தவில்லை.

செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிடி சட்டம் 2002–ன் பிரிவு 13(2)ன் விதிகளின்படி, தாங்கள் **ரூ.46,76,907.28 (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு மற்றும் பைசா இருபத்து எட்டு மட்டும்) நிலுவைத் தொகை 30.06.2024 தேதி அன்று** மற்றும் ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள், கடன் பத்திரங்களில் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி செலுத்தி தங்களது கடனை, கேட்பு அறிவிப்பு பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்தி தங்களது பிணையத்திலுள்ள சொத்தினை மீட்டுக் கொள்ள வேண்டும். தவறினால் மேற்கண்ட சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு அல்லது அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தி, வங்கியிடம் பிணையம் வைத்துள்ள சொத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை அறியவும்.

**பிணையச் சொத்து விபரம் : MODT ஆவண எண்.1931/2016 நாள் 08.06.2016ன்படி :** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மேச்சேரி சார் பதிவு மாவட்டம், மேட்டூர் தாலூகா, ஆமணி ஒலைப்பட்டி கிராமத்தில் சர்வே எண்.81/21ல் 0.12¼ ஏக்கர் மொத்த விஸ்தீரணமுள்ள நிலத்தின் **எல்லைகள் (உரிமை ஆவணப்படி) :** கிருஷ்ணன் நிலத்துக்குத் தெற்கு, மாரி நிலத்துக்கு வடக்கு, சுப்ரமணி நிலத்துக்குக் கிழக்கு, மாரி நிலத்துக்கு மேற்கு, உடன் உரிமை ஆவணங்களில் குறிப்பிட்டவாறான தடவழி உரிமைகள் மற்றும் பயன்பாட்டுரிமைகள் முதலியன சேர்ந்த சொத்து.

எனவே நீங்கள் சர்பாசிச் சட்டம் 2002ன் பிரிவு 13(2)ன் விதிகளுக்கிணங்க **ரூ.46,76,907.28 (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு மற்றும் பைசா இருபத்து எட்டு மட்டும்) நிலுவைத் தொகை 30.06.2024 தேதி அன்று** மற்றும் ஒப்புக் கொண்ட வீதாசாரப் படியான மேல் வட்டி செலவினங்களுடன் மற்றும் தாங்கள் செயல்படுத்திய கடன் ஆவணங்களின் குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க தங்களது கடன் நிலுவையை முழுவதுமாக இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 60 தினங்களுக்குள் செலுத்திவிடவும். தவறினால் வங்கி மேற்படி சட்டத்தின்படி எமக்களிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பிரிவு அல்லது அனைத்துப் பிரிவுகளின்படியான உரிமையினைப் பிரயோகித்து மேற்சொன்ன பிணையச் சொத்தின் மீதான அமலாக்க நடவடிக்கையை மேற்கொள்ள நேரிடும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)ன்படி இந்த அறிவிப்பினை பெற்றதற்குப் பின்னர் தாங்கள் மேற்படி பிணையச் சொத்தின் மீது வங்கியின் ஒப்புதலின்றி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாதென எச்சரிக்க/தடுக்கப்படுகிறீர்கள்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**இக்கணக்கிற்கு முன்னர் வழங்கப்பட்ட சர்பேசி அறிவிப்புகள் திரும்பப் பெறப்படுகிறது.**

**தேதி : 06.08.2024** | **ஒம்./– அதிகாரம் பெற்ற அலுவலர்**
**இடம் : கோயமுத்தூர்** | **யூனியன் பேங்க் ஆப் இந்தியா**



**பொது அறிவிப்பு**

**ICICI Bank** கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிமிடெட், எண். 4/10, மைத்ரீ டவர்ஸ், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு - 560068

[illegible]

| வ. எண். | கடன்தாரர்/கூட்டு-கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / (கடன் கணக்கு எண்) & முகவரி | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய கடனீட்டு சொத்து விபரம் | அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்/அறிவிப்பு நாளன்றுள்ளபடி நிலுவைத் தொகை | செயல்படாத சொத்து (NPA) நாள் |
|---|---|---|---|---|
| 1. | நவீன்குமார் R & கிருத்திகாகிருஷ்ணன்/ மனை எண்.12, மல்கோவா நகர் வீரபாண்டி யூனியன் எல்லை OP, பைரோஜி அக்ரஹாரம் கிராமம் மற்றும் பஞ்சாயத்து, 170,10,170 சேலம்- 636308/LBSAL00006565091 &TBSAL00006473427 | அட்டவணை "A" சொத்து : சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும் மனை எண்.12 பரப்பளவு 1588 சதுர அடி மற்றும் [illegible] சர்வே எண்.167/10A1A1A, பட்டா எண். 556 [illegible] பைரோஜி அக்ரஹாரம் கிராமம், சேலம் [illegible] : 55.00 அடி [illegible] : 55.00 அடி [illegible] : 28.75 அடி [illegible] : 29.00 அடி [illegible] | 28/08/2024 ரூ. 28,81,486.03/- | 06/05/2024 |

[illegible]

தேதி: செப்டம்பர் 27, 2024
இடம்: சேலம்
உண்மையுள்ள, அதிகாரப்பூர்வ கையொப்பதாரர் ICICI பேங்க் லிமிடெட்



**Arcil Premier ARC**

**அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட்**

**CIN : U65999MH2002PLC134884 வலைதளம் : www.arcil.co.in**

**(SMRJ கண்மணி சில்க்ஸ் / J.P.R டெக்ஸ்டைல்ஸ் / ஸ்ரீ சுமித் கார்மெண்ட்ஸ் – ன் நிதிச்சொத்துக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்ட Arcil–SBPS–073–I Trust – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)**

**ஆர்சில் அலுவலகம் – தி ரூபி, 10 வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு) மும்பை – 400 028**

**பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 (சர்ஃபாசி சட்டம்) – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 & 9 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி ஆன்லைன் மூலம் நடைபெறும் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், **DBS** வங்கி (முன்பு லட்சுமி விலாஸ் வங்கி) ஆர்சில் – க்கு 23 டிசம்பர் 2022 தேதிய பதிவு செய்யப்பட்ட பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் வாயிலாக, நிதிச்சொத்துக்கள் பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) **Arcil–SBPS–073–I Trust** (ஆர்சில்) – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட் – க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 மற்றும் 9 ன் கீழ், "'இருக்கின்ற இடத்தில்", "'இருக்கின்ற நிலையில்" "'இருக்கின்றவற்றுடன்" மற்றும் "'திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| கடன்தாரர் பெயர் | **SMRJ கண்மணி சில்க்ஸ் / J.P.R டெக்ஸ்டைல்ஸ் / ஸ்ரீ சுமித் கார்மெண்ட்ஸ்** |
| ஜாமீன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர் | **1). திரு S. முருகேசன் 2). திருமதி J கண்மணி, 3). திரு S.M ஜெயப்ரகாஷ் , 4). திரு J. தயானந்த் , 5). திருமதி H. M. சுமிதா** |
| 09 செப்டம்பர் 2024 தேதிய சர்ஃபாசி சட்டத்தின் படியிலான நிலுவைத்தொகை | 09 செப்டம்பர் 2024 ம் தேதியின் படி, ரூ. 33,90,00,000/– (இந்திய ரூபாயில். முப்பத்து மூன்று கோடியே தொண்ணூறு இலட்சம் மட்டும்) மற்றும் ஒப்பந்த வீதத்தில் / ஆவணத்தில் உள்ள வீதத்தின் படி மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் 10 செப்டம்பர் 2024 முதல் தொகையை திருப்பி செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் இதர நிகழ் செலவுகள் ஆகியன. |
| சுவாதீனம் | **DBS** வங்கி, சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகளின் படி, 2019 மார்ச் 07 அன்று அடையாள சுவாதீனம் எடுத்துள்ளது. |
| ஆய்வு தேதி | வேண்டுகோளின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும். |
| டேவணித்தொகை | **சொத்து எண். 01 – ரூ. 9,50,000/–** (இந்திய ரூபாயில் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 02 – ரூ. 9,30,000/–** (இந்திய ரூபாயில் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 03 – ரூ. 10,20,000/–** (இந்திய ரூபாயில் பத்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 04 – ரூ. 7,70,000/–** (இந்திய ரூபாயில் ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 05 – ரூ. 6,50,000/–** (இந்திய ரூபாயில் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 06 – ரூ. 11,30,000/–** (இந்திய ரூபாயில் பதினோரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 07 – ரூ. 20,30,000/–** (இந்திய ரூபாயில் இருபது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)<br>**டேவணித்தொகையை RTGS மூலம் "Asset Reconstruction Company (India) Ltd" என்ற பெயருக்கு நடப்பு கணக்கு எண். 02912320000561 HDFC பேங்க் லிமிடெட், கிளை – லோயர் பரேல், மும்பை, IFSC Code : HDFC0000291 க்கு செலுத்தப்பட வேண்டும்.** |
| விலைப்புள்ளி & டேவணித்தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி | 05.11.2024 மாலை 05.00 மணி வரை |
| அடிப்படை விலை | **சொத்து எண். 01 – ரூ. 95,00,000/–** (இந்திய ரூபாயில் தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்)<br>**சொத்து எண். 02 – ரூ. 93,00,000/–** (இந்திய ரூபாயில் தொண்ணூற்று மூன்று இலட்சம் மட்டும்)<br>**சொத்து எண். 03 – ரூ. 1,02,00,000/–** (இந்திய ரூபாயில் ஒரு கோடியே இரண்டு இலட்சம் மட்டும்)<br>**சொத்து எண். 04 – ரூ. 77,00,000/–** (இந்திய ரூபாயில் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும்)<br>**சொத்து எண். 05 – ரூ. 65,00,000/–** (இந்திய ரூபாயில் அறுபத்து ஐந்து இலட்சம் மட்டும்)<br>**சொத்து எண். 06 – ரூ. 1,13,00,000/–** (இந்திய ரூபாயில் ஒரு கோடியே பதிமூன்று இலட்சம் மட்டும்)<br>**சொத்து எண். 07 – ரூ. 2,03,00,000/–** (இந்திய ரூபாயில் இரண்டு கோடியே மூன்று இலட்சம் மட்டும்) |
| விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | **சொத்து எண். 01 – ரூ. 25,000/–** (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 02 – ரூ. 25,000/–** (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 03 – ரூ. 30,000/–** (இந்திய ரூபாயில் முப்பதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 04 – ரூ. 25,000/–** (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 05 – ரூ. 25,000/–** (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 06 – ரூ. 30,000/–** (இந்திய ரூபாயில் முப்பதாயிரம் மட்டும்)<br>**சொத்து எண். 07 – ரூ. 30,000/–** (இந்திய ரூபாயில் முப்பதாயிரம் மட்டும்) |
| மின்னணு ஏல தேதி & நேரம் | 06.11.2024 & சொத்து எண். 1 @ நண்பகல் 12.00 மணி<br>சொத்து எண். 2 @ நண்பகல் 12.30 மணி; சொத்து எண். 3 @ பிற்பகல் 01.00 மணி<br>சொத்து எண். 4 @ பிற்பகல் 02.30 மணி; சொத்து எண். 5 @ பிற்பகல் 03.00 மணி<br>சொத்து எண். 6 @ பிற்பகல் 03.30 மணி; சொத்து எண். 7 @ பிற்பகல் 04.00 மணி |
| விலைப்புள்ளி ஆவணங்களுக்கான இணைப்பு | **www.arcil.co.in** |
| **ARCIL** க்கு தெரிந்து நிலுவையிலுள்ள வில்லங்கங்கள் | அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வழக்கு நிலுவையும் இல்லை |
| **ARCIL** க்கு தெரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள் | அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை |
| ஏலம் விடப்படவுள்ள ஜாமீன் சொத்து விபரம் | அடமான சொத்துக்களின் விபரம் –<br>**சொத்து எண். 1** – சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், நாமக்கல் மாவட்டம், சேலம் தாலுக்கா, இளம்பிள்ளை கிராமம், இளம்பிள்ளை டவுன் பஞ்சாயத்து, **R S** எண். 43/5., உட்பிரிவு படி சர்வே எண். 43/5B ல் அமையப்பெற்ற 6203 சதுர அடி.<br>2). சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, வீரபாண்டி ஒன்றியம், பெருமாகவுண்டம்பட்டி கிராமம், சர்வே எண். 27/1, 27/10 & 38/11 ல் உள்ள 6240 சதுர அடி.<br>3). சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, வீரபாண்டி ஒன்றியம், பெருமாகவுண்டம்பட்டி கிராமம், சர்வே எண். 27/1, 27/10 & 38/11 ல் உள்ள 6836 சதுர அடி.<br>4). சேலம் மாவட்டம், சேலம், டவுன், சேலம் மாநகராட்சி (புதியது) சேலம் மாநகராட்சி எல்லை (பழையது) அம்மாபேட்டை கிராமம், பொன்னம்மாபேட்டை, வாசங்க சாலை தெரு, மிட்டா சர்வே எண். 182, பழைய **T.S.** எண் : 57/1, உட்பிரிவு சர்வே எண். 57/1B7, **T.S.** எண்: 25., புதிய வார்டு **AG**, ப்ளாக் 5, பழைய வார்டு "**M**" ல் இடத்தின் உரிமையாளர் – திரு **J** தயானந்த் பெயரில் உள்ள பரப்பு 2400 சதுர அடி.<br>5). சேலம் மாவட்டம் – 637 502, மகுடஞ்சாவடி சார்பதிவகம், சங்ககிரி தாலுக்கா, இடங்கணசாலை கிராமம், சர்வே எண். 657/2C, காந்தி நகர், கதவு எண். 10/245, இடத்தின் உரிமையாளர் பெயர் – திருதயானந்த் – பரப்பு 1800 சதுர அடி.<br>6). சேலம் மாவட்டம் – 637 502, மகுடஞ்சாவடி சார்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, பெருமாகவுண்டன்பட்டி கிராமம், சர்வே எண். 27/10, காளியம்மன் கோவில் தெரு, கதவு எண். 6/206, 207, இடம் & கட்டிடத்தின் உரிமையாளர் – திரு முருகேசன் – இடம் – 4172 சதுர அடி, கட்டமைப்பு – 8119 சதுர அடி.<br>7). சேலம் மாவட்டம் – 637 502, மகுடஞ்சாவடி சார்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, பெருமாகவுண்டன்பட்டி கிராமம், சர்வே எண். 38/2 மற்றும் 38/11, காளியம்மன் கோவில் தெரு, கதவு எண். 6/213, 6/214, இடம் & கட்டிடம். உரிமையாளர் பெயர் – திரு முருகேசன் – இடம் – 80 சென்ட் அதாவது 34848 சதுர அடி கட்டமைப்பு – 4629 சதுர அடி. |

விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன

1). ஏல விற்பனையானது அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அதன் உதவியுடன் மின்னணு ஏலம் மூலம் நடைபெறும். விலைகோரல் "'ஆன்லைன் மின்னணு விலைகோரல்" வாயிலாக வலைதளம் **www.arcil.co.in** மூலம் மட்டுமே நடைபெறும். **ARCIL** என்பது மின்னணு ஏலத்துக்கான தளத்தை ஏற்படுத்தி கொடுக்கும் சேவைதாரராகும்.

2). ஏலமானது விலைப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும் மற்றும் அதில் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறைகளின் படியும் நடத்தப்படும். ஏலதாரர்கள் **ARCIL** ன் வலைதளம் **www.arcil.co.in** யையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு மற்றும் சேவைதாரர் **ARCIL** ன் வலைதளத்தையும் விலைப்புள்ளி ஆவணங்களுக்கும், ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்துக்களின் விபரங்களுக்கும் / விலைப்புள்ளி படிவங்களை பெறுவதற்கும் பார்வையிடலாம்.

3). ஏலதாரர்கள் தங்களது சொந்த அலுவலகங்கள் / அவர்களது விருப்பத்துக்குரிய இடத்திலிருந்து விலைகோரி / விலைப்புள்ளி சமர்ப்பித்து மின்னணு ஏலத்தில் பங்கேற்கலாம். அந்தந்த ஏலதாரரால் இண்டர்நெட் இணைப்பை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிகாரப்பூர்வ அலுவலர் / **ARCIL** / சேவைதாரர் இண்டர்நெட் தொடர்பிழப்பு, நெட்வொர்க் பிரச்சினைகள், கணிப்பொறி செயலிழப்பு, மின் துண்டிப்பு போன்ற காரணங்களுக்கு பொறுப்பல்ல.

4). விபரங்களுக்கும், உதவிக்கும், செயல்முறைக்கும் மின்னணு ஏலம் தொடர்பான ஆன்லைன் பயிற்சிக்கும் உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன், திரு இர்ஃபான், திரு மிரஜ் சயீத் ஆகியோரை தொடர்பு எண்கள். 9176500311, 9787862271, 9820485425 மின்னஞ்சல் முகவரி – **gurunathan.solaiappan@arcil.co.in irfan.a@arcil.co.in , meraj.sayed@arcil.co.in** ல் தொடர்பு கொள்ளலாம்.

5). வாங்குவதில் விருப்பமுள்ளவர்கள் / ஏலதாரர்கள் தங்களது பெயர்களை இதன் மேற்குறிப்பிட்ட **www.arcil.co.in** ல் பதிவு செய்து கொண்டு, இதன் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறவுள்ள மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6). சொத்து ஆய்வு மற்றும் கூடுதல் தகவல்களுக்கு உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன் 91765 00311 (அலைபேசி) **gurunathan.solaiappan@arcil.co.in** திரு இர்ஃபான் **A**, 9787862271 (அலைபேசி) **irfan.a@arcil.co.in** , திரு மிரஜ் சயீத், 98204 85425 (அலைபேசி) **meraj.sayed@arcil.co.in** அல்லது இதன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

7). ஏலத்தின் எந்த நிலையிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், எந்த முன்னறிவிப்பும் வழங்காமல், விலைப்புள்ளியை / விலைகோரலை ஏற்றுக்கொள்ள / நிராகரிக்க / மாற்ற / ரத்து செய்ய அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

8). வாங்குவதில் பெற்றி பெற்றவர் / ஏலதாரரே சட்டபூர்வ நிலுவைகள் (ஏதேனும் இருப்பின்), வரிகள், செலுத்தத்தக்க கட்டணங்கள், வாங்கும் விலை மீதான **GST**, ஜாமீன் சொத்துக்களை தமது பெயரில் பரிமாற்றம் செய்ய வழங்கப்பெற சட்டப்படி செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9). விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்து தொடர்பான சொத்துரிமை, வில்லங்கம் மற்றும் ஜாமீன் சொத்துஃகளை பாதிக்கும் கோரிக்கைகள் / சட்டபூர்வ நிலுவைகள் உள்ளிட்ட நிலுவைகள் போன்றவற்றை சுய சிரத்தையுடன் விசாரித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஏல விளம்பரம் **ARCIL** ன் எந்த பிரதிநிதித்துவத்தையோ உத்திரவாதத்தையோ வழங்கவில்லை., வழங்கப்போவதுமில்லை. **ARCIL** ன் அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த விதத்திலும் மூன்றாம் நபரின் கோரிக்கைகள் / உரிமைகள் / நிலுவைகளுக்கு பொறுப்பல்ல.

10). இந்த செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும், இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட தபரின் சிறந்த தகவலுக்கு எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் அதில் ஏதேனும் பிழையோ. தவறான கூற்றோ அல்லது தவிர்த்தல்களோ இருப்பின், அதன்கு இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபர் பொறுப்பல்ல.

11). ஏதேனும் நீதிமன்றம் / தீர்ப்பாயத்தின் தலையீடு / உத்தரவு காரணமாக ஏற்படும் நிகழ்வுகள் / பின் விளைவுகளால், விற்பனையை ரத்து செய்ய நேர்ந்தால், (பொருத்தமான சட்ட கருத்துரை மற்றும் **ARCIL** க்கு உள்ள சட்டபூர்வ தீர்வு) **ARCIL** ஆனது "'டேவணித்தொகை" யை வட்டியின்றி வாங்குபவர் / ஏலதாரருக்கு திரும்ப வழங்கிடும் மற்றும் / அல்லது "'விற்பனை செயல்முறைகள்" திரும்ப பெற்றுக்கொள்ளும். வாங்குபவரோ / ஏலதாரரோ **ARCIL** அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக, இழப்பு, செலவுகள் / செலவுகள் / வியாபார வாய்ப்பிழப்பு போன்ற எவ்விதத்திலான எந்த கோரிக்கையையும் எழுப்ப உரிமையில்லை.

12). மேற்சொன்ன நிலுவைத்தொகைகளுக்கு பொறுப்பாக உள்ள கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பை, இதன் மேற்குறிப்பிட்ட ஏல விற்பனை நடத்தப்படவிருப்பதற்கான, பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8 மற்றும் 9 ன் கீழான அறிவிப்பு எனவும் கருதிக்கொள்ள வேண்டும்.

13). ஏதேனும் காரணத்துக்காக, இதன் மேற்குறிப்பிட்டவாறு ஏலம் நடைபெறவில்லையெனில், **ARCIL** க்கு பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(5) மற்றும் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏதேனும் இதர முறைகளின் கீழ், ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது.

ஒப்பம்/–
அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம் – சேலம் | அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
தேதி – 28.09.2024 | Arcil-SBPS-073-I Trust – ன் அறங்காவலர்